பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>600 சொற்களில்</u> விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) காலம் அறிந்து செயல்படும் விதம் குறித்து குறள் கூறுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கேள்வி பற்றி குறள் விளக்குபவற்றை எடுத்துரைக்க.

17. (அ) ஈகை குறித்து நாலடியார் உரைக்கும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) நான்மணிக்கடிகை உணர்த்தும் நும் பாடப் பகுதிக் கருத்துக்களை விளக்குக.

18. (அ) இன்னா நாற்பது கூறும் பாடப் பகுதிச் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) கல்வியின் மேன்மையாக நீதிநெறி விளக்கம் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

19. (அ) உளநோய்க்கு மருந்தாக சிறுபஞ்சமூலம் விளக்குவன யாவை?

(அல்லது)

(ஆ) ஆசாரக்கோவை உணர்த்தும் அறக் கருத்துகளை விளக்குக.

20. (அ) மூதுரை உணர்த்தும் மனிதனுக்குத் தேவையான அற நெறிக் கருத்துக்களை எடுத்துக் கூறுக.

(அல்லது)

(ஆ) நல்வழி உணர்த்தும் பாவ, புண்ணியங்களை எடுத்துரைக்க.

---



**Reg. No. : ..............................**

**Code No. : 30210** **Sub. Code : SMTA 42**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2019.

Fourth Semester

Tamil — Core

அற இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்து எழுதவும்.

1. கற்ற அளவிற்கு ஏற்ப மக்களுக்கு அமைவது எது?
   (அ) செல்வம் (ஆ) குணம்
   (இ) அறிவு (ஈ) அருள்

2. தன்னைவிட வலிய கூகையைப் பகலில் வெல்வது எது?
   (அ) பருந்து (ஆ) காகம்
   (இ) புறா (ஈ) சேவல்

3. பெண்பனைக்கு ஒப்பானவர்கள் என்று நாலடியார் யாரைப் போற்றுகிறது?
   (அ) ஈகை குணம் கொண்டவரை
   (ஆ) தர்மம் செய்யாதவரை
   (இ) செல்வந்தரை
   (ஈ) ஏழைகளை

4. வன்சொல்லை மென்சொல்லாகவும், கசப்பு உணவை இனிப்புணவாகவும் கருதுபவர் யார்?
(அ) அறிவுடையோர்
(ஆ) பகையுடையோர்
(இ) மெய்ப்பொருளுணர்ந்தவர்
(ஈ) ஈகைக் குணமுடையவர்

5. அந்தணர்க்கு பசுவோடு எதைக் கொடுத்தல் இனிதென இனியவை நாற்பது உணர்த்தியுள்ளது?
(அ) பொருள் (ஆ) பொன்
(இ) உணவு (ஈ) பணம்

6. அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பயனையும் தருவது
(அ) பக்தி (ஆ) செல்வம்
(இ) கல்வி (ஈ) வறுமை

7. சிறுபஞ்சமூலம் நூலின் ஆசிரியர் யார்?
(அ) சமண முனிவர்கள் (ஆ) கபிலர்
(இ) ஔவையார் (ஈ) காரியாசன்

8. தம்மைச் சார்ந்தவரை உயர்த்தலால் விளைவன யாது?
(அ) நன்மை (ஆ) தீமை
(இ) வறுமை (ஈ) பெருமை

9. யாரை எண்ணி இருப்பவர்க்குத் துன்பம் இல்லை என நல்வழி கூறுகிறது?
(அ) சரஸ்வதி (ஆ) திருமால்
(இ) பிரம்மா (ஈ) சிவன்

10. வறுமையில் வாடினாலும் மாறாத குணமுடையவர் யார்?
(அ) சான்றோர்கள் (ஆ) திருடர்கள்
(இ) துறவிகள் (ஈ) பக்தர்கள்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) கல்லாமையால் வரும் இழிவு பற்றிய குறள் கருத்துக்களை எழுது.
(அல்லது)
(ஆ) அறிவு உடைமை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

12. (அ) ஈதலின் மேன்மையை நெய்தல் நிலத் தலைவன் மூலம் நாலடியார் உணர்த்துவன யாவை?
(அல்லது)
(ஆ) சிறந்த அறம் பற்றியும், நரகத்தில் வீழ்பவர் பற்றியும் திரிகடுகம் கூறுவன யாவை?

13. (அ) 'இடர்பட்டார் செய்வது செய்தல் இனிது' — இனியவை நாற்பது கூறுவனவற்றை விளக்கு.
(அல்லது)
(ஆ) இன்னா நாற்பது பற்றிக் குறிப்பு வரைக.

14. (அ) 'தும்பை விட்டு வாலைப் பிடிக்கக்கூடாது' பழமொழி கூறுவன யாவை?
(அல்லது)
(ஆ) வனப்பு பற்றி சிறுபஞ்சமூலம் கூறுவதை எழுதுக.

15. (அ) 'நாழி அரிசிக்கே நாம்' — நல்வழி பாடற் கருத்தைக் கூறுக.
(அல்லது)
(ஆ) மழை பெய்து எல்லோருக்கும் பயன்படுகிறது என்பதை மூதுரை எடுத்துக் கூறும் விதம் யாது?



Nesamony Memorial Christian College, Marthandam